# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1659/18 - 2010 ජුනි 23 වැනි බදාදා - 2010.06.23

*1659/18 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் இல. 916

**பனங்கள்ளு அல்லது ஏதேனும் காய்ச்சி வடித்தல் மூலம் தயாரிக்கப்பட்ட மதுபானம் தவிர்ந்த மதுபானங்கள் மீதான மது வரி**

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2010, யூன் 24.ஆந் திகதியிலிருந்து–

(1) இக்கட்டளை மூலம் பணிப்பதாவது, பனை மரத்தின் இயற்கையான உற்பத்திப் பொருட்கள் அல்லது ஏதேனும் தாவரத்திலிருந்து காய்ச்சி வடித்தல் தவிர்ந்த செயன்முறை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட அற்ககோலின் 4 சத வீதத்திற்கு மேல் கனச் செறிவுள்ள (கள்ளு அல்லது வேறு தானியம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் மதுபானம் தவிர்ந்த) இலங்கையில் தயாரிக்கப்பட்ட மதுபானத்தின் மீது அனுமதிக்கப்பட்ட வ்ரூட் ஒவ்வொரு லீற்றருக்கும் ஐநூற்றி பதினைந்து ரூபா (ரூபா 515) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்பட வேண்டும். ஆனாலும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மதுபானங்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும்போது, அத்தொகை எவ்வளவாயினும், அவற்றின் மீது அத்தகைய தீர்வை விதிக்கப்படவோ அல்லது அறவிடப்படவோ கூடாது எனவும் ; அத்துடன்

(2) 2009.03.26 ஆந் திகதிய 1594/24 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 907 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும் ,

இக்கட்டளை மூலம் பணிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2010, யூன் 23.

7 - 299/1

## மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல் இல. 917*

### வெல்லப்பாகு, பனஞ்சாராயம், தென்னை மற்றும் பதனிடப்பட்ட சாராயம் மீதான தீர்வை

*காலத்துக்குக் காலம் திருத்துப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2010,யூன் 24 ஆந் திகதியிலிருந்து–*

*(1) இக்கட்டளை மூலம் பணிப்பதாவது, இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உத்தரவுப்பத்திரம் பெற்ற உற்பத்தி நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் வெல்லப்பாகு (மொலாசியஸ்), பனஞ்சாராயம், தென்னை மற்றும் பதனிடப்பட்ட சாராயம் என்பவற்றின் மீது அனுமதிக்கப்பட்ட, ஒவ்வொரு ஙீரும் லீற்றருக்கும் அறுநூற்றி அறுபது ரூபா (ரூபா 660) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்பட வேண்டும். ஆனாலும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாராயம் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும்போது, அத்தொகை எவ்வளவாயினும், அவற்றின் மீது அத்தகைய தீர்வை விதிக்கப்படவோ அல்லது அறவிடப்படவோ கூடாது எனவும் ; அத்துடன்*

*(2) 2009.03.26 ஆந் திகதிய 1594/24 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 908 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும்,*

*இக்கட்டளை மூலம் பணிக்கின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01*
*2010, யூன் 23.*

*07 – 299/2*

---

## மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல் இல. 918*

### இலங்கையில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு 'மது' சாரம் மீதான தீர்வை

*காலத்துக்குக் காலம் திருத்துப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2010, யூன் 24 ஆந் திகதியிலிருந்து–*

*(1) இக்கட்டளை மூலம் பணிப்பதாவது, இலங்கையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு 'மது' சாரம் மீது அனுமதிக்கப்பட்ட, ஒவ்வொரு ஙீரும் லீற்றருக்கும் எழு நூற்றி தொண்ணூறு ரூபா (ரூபா 790) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்பட வேண்டும். ஆனாலும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுசாரங்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும்போது, அத்தொகை எவ்வளவாயினும், அவற்றின் மீது அத்தகைய தீர்வை விதிக்கப்படவோ அல்லது அறவிடப்படவோ கூடாது எனவும் ; அத்துடன்*

*(2) 2009.03.26 ஆந் திகதிய 1594/24 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 909 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது,*

*எனவும் இக்கட்டளை மூலம் பணிக்கின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01*
*2010, யூன் 23.*

*7 – 299/3*

## மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல் இல. 919*

**மாவூறற் மதுபானம் மீதான மதுவரித் தீர்வை**

*காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவினால் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2010,யூன் 24 ஆந் திகதியிலிருந்து-*

*(அ) இலங்கையில் அனுமதிபெற்ற உற்பத்திச்சாலை எதனிலுமிருந்து உற்பத்தியாகி, அதன் சுட்டுத் துண்டில் சுத்த மதுசாரச் செறிவு ஐந்து சத வீதத்திற்குக் (5%) குறைந்ததெனக் குறிப்பிட்டு வெளியாகும் மாவூறற் மதுபானம் ஒவ்வொரு லீற்றருக்கும் ரூபா ஐம்பத்தி எட்டு (ரூபா 58.00) எனும் வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்படல் வேண்டுமென்றும் ;*

*(ஆ) இலங்கையிலுள்ள அனுமதிபெற்ற உற்பத்திச்சாலை எதனிலுமிருந்து உற்பத்தியாகி, அதன் சுட்டுத் துண்டில் சுத்த மதுசாரச் செறிவின் ஐந்து வீதம் (5%) அல்லது அதற்குக் கூடுதலானதெனக் குறிப்பிட்டு வெளியாகும் மாவூறற் மதுபானம் ஒவ்வொரு லீற்றருக்கும் ரூபா எழுபத்தி நான்கு (ரூபா 74.00) எனும்வீதத்தில் தீர்வை ஒன்று அறவிடப்படல் வேண்டுமென்றும் ;*

*(இ) அத்தகைய மதுபானம் அனுமதிபெற்ற உற்பத்திச்சாலை எதனிலுமிருந்து இலங்கையிலுள்ள எந்த இராஜதந்திர தூதரகத்தின் பாவனைக்காகவும் அல்லது எந்த வெளிநாட்டிற்கும் வழங்கப்படின், மேற்படி வழங்கிய மதுபானத்துக்கான கொடுப்பனவு அத்தூதரகத்தின் வெளிநாட்டுக் கணக்கிலிருந்து பெறப்படுமிடத்து, மேற்குறித்த தீர்வை விதிக்கப்படலாகாது அல்லது அறவிடப்படலாகாது எனவும் ; அத்துடன்*

*(ஈ) 2008.10.07 ஆந் திகதிய 1570/8 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 906 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும் இக்கட்டளை மூலம் பணிக்கின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01*
*2010, யூன் 23.*

*07 - 299/4*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.